**தெவிநுவர பிரதேச சபை - 2023**
------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெவிநுவர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தெவிநுவர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றுமு உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 தளபாட மற்றும் உபகரண விடயங்கள் தொடர்பான மொத்தக் கிரயம் ரூபா 82,198 தொகை குறைவாகவும் மற்றும் 04 நிர்மாண வேலை தொடர்பாக செலுத்த வேண்டிய நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 227,189 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத கபுகம மில்லவெவ சதுர முன்பள்ளி திருத்த வேலை அலுவல்களுக்காக ரூபா 491,641 இற்கான | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (இ) | கட்டிடங்களை திருத்த வேலை மேற்கொள்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2,060,282 இற்கான செலவு காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருந்தது. | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டுக்கான பெற வேண்டியவைகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த 03 வருமான தலைப்புக்கள் தொடர்பான ரூபா 123,790 தொகை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதன் காரணமாக பதிவழிக்கப்பட்டிருந்தமையால் பெற வேண்டிய வருமானம் அதிக தொகையால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என. | சரி செய்யப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டிற்காக கிடைத்திருந்த ரூபா 127,715 இற்கான நிலையான வைப்புக்கள் மீதான வட்டி மீளாய்வாண்டின் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் கணக்குகள் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மிகை கொடுப்பனவு என அறவிடப்பட்டிருந்த ரூபா 86,160 தொகைக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமல் காசுக் கணக்கிற்கு வரவு வைத்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் கணக்குகள் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிலுவை வாடகை வருமான மீதி ரூபா 12,702,441 தொகை எனினும், அதனோடு தொடர்புடைய அட்டவணையின் படி மீதி ரூபா 11,873,095 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 829,346 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பதிவேடுகள் ஏதும் காணப்படவில்லை என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 189,074,953 தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு சரி செய்யப்பட்டு 2024 ஆண்டு நிதிக் கூற்றுக்களில் தகவல்கள் உட்படுத்தப்பட்டதென. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 31,491,763 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 20,240,880 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 வங்கிக் கணக்குகள் தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றுக்களில் நீண்ட காலமாக காணப்படும் ரூபா 49,414 தொகைக்கான இனங்காணப்படாத 05 மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த பெறுமதிகளின் தேறிய பெறுமதி ரூபா 12,364 இற்கான மீதி தென் மாகாண ஆளுனரின் அங்கீகாரத்தை பெற்று திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 3,585,236 | 2,887,132 | 2,733,790 | 6,099,639 | 2,923,135 | 1,924,480 | 1,380,399 | 5,946,297 |
| ii. | வாடகை | 26,595,120 | 28,887,419 | 30,825,118 | 12,702,441 | 26,036,460 | 4,388,695 | 3,892,244 | 14,640,140 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 3,399,900 | 4,184,864 | 4,160,404 | 181,250 | 5,075,500 | 810,040 | 884,225 | 156,790 |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 16,410,800 | 10,744,038 | 7,793,138 | 3,467,456 | 7,314,800 | 1,338,664 | 917,574 | 516,556 |
| | மொத்தம் | 49,991,056 | 46,703,453 | 45,512,450 | 22,450,786 | 41,349,895 | 8,461,879 | 7,074,442 | 21,259,783 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வீதவரி மீதி ரூபா 5,865,700 தொகையாக காணப்பட்டதுடன், 3588 வீதவரி | அந்த நிலுவை மீதியில் ரூபா 865,383 தொகையொன்று தற்போது அறவிடப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலகுகள் தொடர்பாக ரூபா 1,920,131 தொகையுடன் ரூபா 7,785,901 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் மொத்த அறவீடு ரூபா 1,763,511 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 6,022,390 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | | |
| (ஆ) | வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்து வருடாந்த பெறுமதியின் மீது வாடகை அறவிட வேண்டியிருந்த போதிலும், 3300 வீதவரி அலகுகளில் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு 2011 ஆண்டின் பின்னர் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஒக்தோபர் 27 திகதி ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கான ஆவணங்கள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான வாடகை செலுத்தும் 129 கடையறைகளில் 84 தொடர்பாக ரூபா 11,873,095 தொகை மற்றும் 04 வர்த்தக கட்டிடத் தொகுதிகளில் கடையறைகள், மீன் பலகைகள் மற்றும் 44 தற்காலிக தரை சதுரங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பதனால் ரூபா 2,934,971 இற்கான நிலுவை வாடகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன். நிலுவைத் தொகையையும் செலுத்தியிருக்காமல் தொடர்ந்தும் மூடியிருக்கும் கடையறைகள், தரைச் சதுரங்கள், மீன் பலகைகள் சபைக்கு உரித்தாக்கல் தொடர்பாக கடை வாடகையாளர்களை அறிவுருத்தும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதிய இலக்கம் தபபா/பபாகோ/2010/01 சுற்றறிக்கையின் 11 ஆம் பந்திக்கு இணங்க வாடகையாளர் வேறு தரப்பினருக்கு வாடகை உரிமையை சாட்டுதல் சபையின் அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்படக் கூடியதாக இருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான 03 வர்த்தக கட்டிடத் தொகுதிகளில் 14 கடையறைகள் ஏனைய தரப்பினரினர்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | துணை வாடகை வழங்கியிருந்த கடையறைகளில் கோப்பிவத்த 03 ஆம் இலக்க கடையறைக்காக உரிமையை உரித்தாக்கி உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனை படி அது வரை நிலுவைத் தொகையை வாடகையாளரிடம் பெற்றுக்கொண்டு அந்த வாடகையாளர்களுக்கே மீண்டும் கடைகள் வழங்கப்பட்டது என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | தெவிநுவர பிரதேச சபைக்கு சொந்தமான கோப்பிவத்த கடையறை இலக்கம் 03 ரூபா 13,000 வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த வாடகையாளரால் | 2003 ஜூலை 25 திகதி முதல் 15 நாட்களுக்காக சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்காக இந்த | சட்டரீதியான வாடகையாளர்களினால் துணை வாடகைக்கு வழங்குவது தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | தெவிநுவர எசல திருவிழா நடைபெறும் 15 நாட்களுக்காக ரூபா 150,000 தொகை துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், இந்த துணை வாடகை தொடர்பாக வருமானப் பரிசோதகரினால் கண்டறிந்து சபைக்கு அறிவித்து உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடையறை வழங்கப்பட்டதெனவும், கடையறை அதற்காக தயாரித்தல் 2023 ஜூலை 24 மேற்கொண்டிருந்ததெனவும், அந்த கடையறை 2023 ஜூலை 23 திகதி வரை தனியார் மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்பட்டிருந்ததெனவும், 2023 ஆகஸ்ட் 09 திகதி சிற்றுண்டிச்சாலை அகற்றப்பட்டிருந்தது என. | கண்டறிந்து விரைவாக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 999,316 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 59,798,885 தொகை பெற வேண்டியிருந்தது. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாளாந்தம் சேகரமாகும் சுமார் 3 ½ தொன்கள் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்காகவும், உக்காத குப்பைகளை மீள்சுழற்சி மேற்கொள்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று சபையில் காணப்படாமையால் வெல்லமடம மோலவத்த எனும் காணியில் போடப்பட்டு மண்ணினால் மூடப்படுகின்றதெனவும், இதன் காரணமாக இந்த பிரதேசத்தில் தொற்று நோய்கள் பரவக் கூடிய ஆபத்து நிலைமையொன்று காணப்பட்டது. | 2024 மார்ச் மாதம் முதல் உக்கக்கூடிய குப்பைகள் மற்றும் உக்காத குப்பைகளை வெவ்வேறாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், உக்கக் கூடிய குப்பையை வெல்லமடம காணியில் போடுவதற்கும், உக்காத குப்பைகளை காலி மொன்டோரியாவத்த திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | முறையாக குப்பை முகாமைத்துவ முறைமையொன்று அறிமுகப்படுத்த வேண்டும். |

## 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2013 ஆண்டின் போது ஒரு கம்பனியிலிருந்து ரூபா 9.95 மில்லியன் தொகைக்கு முறைசாரா விதமாக கொள்வனவு செய்திருந்த டெரெக்ஸ் 820 பெக்கோ இயந்திரத்திற்காக ரூபா 3.995 மில்லியன் தொகைக்கான கடன் தொகையினாலும் மற்றும் மீதித் தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டு மீதித் தொகை ரூபா 5.995 மில்லியன் செலுத்தப்படாமையால் குறிப்பிட்ட கம்பனி சட்ட நடவடிக்கை எடுத்திருந்தமையால் வழக்கரிஞர் கட்டணம் ரூபா 112,007 செலவொன்று கொள்வனவு செய்த போது பதிவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமையால் ரூபா 68,305 இற்கான செலவொன்றும் மேற்கொள்வதற்கும் நேரிட்டிருந்து. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என. | கொள்வனவு செய்தல் உரிய செய்முறை ஒன்றின் மூலம் செயற்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்காக 2022 திசெம்பர் 15 திகதிய உள்ளூராட்சி சுற்றறிக்கை இலக்கம் 2022/01 இணங்க நிகழ்வு நிலையினை அறிமுகப்படுத்தல் கட்டாயமாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் இணைய தளமொன்று தீர்மானிக்கப்பட்டு நிகழ்வு நிலை கொடுப்பனவு வசதிகள் ஏற்படுத்துவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது நிருவாக அமைச்சின் மூலம் பணம் அறவீடு செய்யாமல் மென்பொருள் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான கூறுவிலைகள் அழைக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் பொறுத்துவதற்கு முடியுமா என உள்ளூராட்சி ஆணையாளரிடம் அறிவுரை கோரப்பட்டதுடன், இது தொடர்பாக அறிவுரை ஏதும் அல்லது பரிந்துரைகள் கிடைத்திருக்கவில்லை எனவும், அதனால் நிகழ்வு நிலையில் கொடுப்பனவு செய்யும் மென்பொருள் உட்பட இணைய தளமொன்று நிறுவுதலில் சிக்கல் நிலைமையொன்று காணப்பட்டதென. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 9.95 மில்லியன் பெறுமதியான பெக்கோ இயந்திரமொன்றிற்கான பதிவுச் சான்றிதழ் மற்றும் காப்புறுதி உள்ளடக்கம் பெற்றுக்கொள்ளாமல் | நட்டத்தை அறவீடு செய்வதற்காக முன்னைய தலைவர் மற்றும் ஓய்வுபெற்ற செயலாளருக்கு அடிக்கடி | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் 2019 ஆண்டில் விபத்துக்குள்ளாகிய பின்னர் மீளாய்வாண்டு மேற்கொள்ளப்பட்ட நி.பி. 104(4) அறிக்கைக்கு இணங்க குறிப்பிட்ட தரப்பினர்களிடன் ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவித்த போதிலும் இதுவரை அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது என, | |

## 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 149 இற்கு இணங்க மொத்த வருமானம் தொடர்பாக 01 சதவீதத்தை மிகைக்காத கட்டணமொன்று அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 1,719,464 தொகைக்கு பதிலாக ரூபா 778,277 தொகை அறவிடப்பட்டமையால் ரூபா 941,187 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நிறுவனம் வழங்கியிருந்த வருமான செலவு அறிக்கையின் படி வருமானம் ரூபா 77,827,708 தொகைக்கான 01 சதவீத தொகையாகிய ரூபா 778,277 தொகை அறவிடப்பட்டதென. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் பிரிவு 10(6) இற்கு இணங்க 2016 முதல் 2020 வரையான காலப் பகுதியில் 761 கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு 03 வருடங்களுக்கும் 07 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 100 கட்டிடங்களுக்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் வேலைப் பழுவின் காரணமாக தொடர் நடவடிக்கை எடுக்க முடியாமையால் அங்கீகரிக்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களுக்கு அனுமதிப்பத்திரங்களின் குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் செல்லுபடியாகும் காலம் முடிவடைய முன்னர் இணக்கச் சான்றுகள் பெற்றுக்கொள்ளும் படியும் அவ்வாறு பெற்றுக்கொள்ளாவிடின் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தை நீடித்துக்கொள்ளும் படியும் கடிதம் அனுப்பப்பட்டதென. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சங்கத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சபை உத்தியோகத்தர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக சட்ட ஏற்பாடுகள் ஏதும் காணப்படாத போதிலும் முன்னைய மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 254,000 தொகை வெளித்தரப்பினருக்கு சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | இதற்காக தென் மாகாண ஆளுனரின் அங்கீகாரம் கிடைத்திருந்ததென. | தாபனக் கோவை, நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | தெவிநுவர புதிய கடைத் தொகுதியின் இலக்கம் UFC 17 கடையறை தொடர்பாக பிழையாக சிட்டையிடப்பட்டிருந்த ரூபா 85,570 இற்கான வாடகை மற்றும் மிகை கட்டணம் ஆளுனரின் அங்கீகாரம் இன்றி ஏடுகளில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | ஆளுனரின் அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஆளுனரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கபுகம மிரிஸ்வத்த காணியில் சபைக்கு சொந்தமான 10.44 பர்சஸ் காணித் துண்டு பல வருட காலம் முதல் அங்கீகாரமற்ற வதிவோரினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையால் அது தொடர்பான அறிவுரைகள் உள்ளூராட்சி ஆணையாளர்களிடம தேவையான ஆலோசனைகள் விரைவாக பெற்றுக்கொண்டு அந்த அங்கீகாரமற்ற வதிவோரை அகற்றுவதற்கு சபையினால் தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | கபுகம மிரிஸ்வத்த காணியின் உரிமையை உரித்தாக்குவதற்காக குறிப்பிட்ட கோப்புக்கள் உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என. | அங்கீகாரமற்ற வதிவோரை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான இலங்கை வங்கி நடாத்தப்பட்டு வந்த கட்டிடம் 2019 ஆண்டு முதல் ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. | பழைய இலங்கை வங்கி கட்டிடத்தில் நூலகத்தை நிருவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், தற்போது திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும். | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.7 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது தெவிநுவர துறைமுகப் பாதையை தார் இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 899,680 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 08 இடங்களில் பரப்பிய தார் அகன்றிருந்ததுடன், கிடங்குகள் ஏற்பட்டிருந்தது. மேலும், குழாய் நீர் விரித்தலுக்காக பாதையின் சில இடங்கள் பழுதடைந்திருந்த போதிலும் அந்த பகுதிகளை திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒப்பந்த சங்கத்தினால் இந்த இடங்களை சரி செய்யாமையினால் தடுத்து வைத்தல் பணத்திலிருந்து சபையினால் உடைந்த இடங்களை செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | விரைவாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | தலல்ல கந்தமுதுன க்ரோவுன் சிடி பாதையின் வடிகால் முறையினை உரிய முறையில் தயாரித்திருக்காமையால் ரூபா 952,022 தொகை செலவிடுவதற்கு நேரிட்டிருந்தது. மேலும், இந்த வடிகாலில் காணப்பட வேண்டிய ஆழம் நீர் வடிந்து செல்வதற்கு போதியளவு சரிவு ஒன்று வைக்காமல் நிர்மாணிக்கப்பட்டமையால் நீர் வழிந்தோடுதல் நலிவான மட்டமொன்று மற்றும் நீர் சேகரமாகியிருத்தல் காரணமாக டெங்கு போன்ற தொற்றுநோய் பரவும் ஆபத்து நிலைமையொன்று காணப்பட்டது. இந்த வடிகாலை அபிவிருத்தி செய்த பின்னர் வடிகால் நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதியில் மழை காலங்களில் பாதை நீர் நிரம்பும் நிலைமையொன்று காணப்பட்டது. | பாதையின் ஆரம்ப மற்றும் இறுதி இடங்களில் வடிகால்கள் நிர்மாணிப்பதற்கு தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும், முன்னர் நிர்மானிக்கப்பட்டிருந்த வடிகால்களில் குறைபாடுகளும் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | காணிகளை ஏலவிற்பனை செய்யும் போது குறிப்பிட்ட பாதைகள் மற்றும் வடிகால் முறைமை உரிய நியமங்களில் நிர்மாணித்துக்கொள்ள வேண்டும். |
| (இ) | 2014 ஆண்டின் போது ரூபா 1,271,174 இற்கான செலவொன்று மேற்கொண்டு பாரியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கந்தறை சுகாதார நிலையம் 2024 ஏப்ரல் 25 திகதி அளவிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்துவதற்கு சபையின் பொறுப்பு வாய்ந்த தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கட்டிடத்தின் நிர்மாண வேலை பூர்த்தி செய்த பின்னர் கந்தறை நூலகம் அங்கு நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதி ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.8 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியளவில் சபையில் கடமையாற்றிய, சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள இரண்டு ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை 306,137 இற்கான கடன்மீதி பல வருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது. | ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய கடன் தவணையை ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து கழித்துக்கொள்வது தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது எனவும், சேவையை விட்டுச் சென்றுள்ள மின்சார தொழில்நுட்ப உத்தியோகத்தர் தொடர்பாக முறைபாடொன்று இணக்கச் சபையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், எதிர் காலத்தில் அதன் தீர்ப்புக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |